
# USER INTERFACE DESIGNER / USER EXCHANGE DESIGNER(UI/UX Designer)


## பயனர் இடைமுக வடிவமைப்பாளர்/பயனர் பரிமாற்ற வடிவமைப்பாளர்



எந்தவொரு செயலையும் சிரமமின்றி எளிமையாக செய்துமுடிக்க வேண்டும் என்ற எண்ணமும் அதற்காக சிந்திக்கும் திறனுடையவரா நீங்கள். உங்களின் இயல்புக்கும் முன்னேற்றத்திற்குமான ஒரு வேலை பயனர் இடைமுக வடிவமைப்பாளர்/பயனர் பரிமாற்ற வடிவமைப்பாளர் USER INTERFACE DESIGNER / USER EXCHANGE DESIGNER ஆகத்தான் இருக்கும். இந்த வேலையைப் பெற நீங்கள் என்ன கற்க வேண்டும் என்பதை இச்சிற்றேட்டில் தெரிந்து கொள்ளுங்கள்.




இயந்திரங்களுக்கும் அதனைப் பயன்படுத்துபவர்களுக்கும் இடையே நிகழக்கூடிய அத்தனை நிகழ்வுகளையும் வடிவமைப்பவர்கள் யார் தெரியுமா? அவர்கள்தான் ”பயனர் இடைமுக வடிவமைப்பாளர்/பயனர் பரிமாற்ற வடிவமைப்பாளர் USER INTERFACE DESIGNER / USER EXCHANGE DESIGNER எனப்படுகின்றனர். இப்போது நாம் பயன்படுத்தும் தொடுதிரை கைபேசி (Touch screen Mobile), தொடுதிரையுடைய தானியங்கி பணமெடுக்கும் இயந்திரம், இணையதளங்கள், சூட்டிகை கைகடிகாரங்கள்




(Smart Watches)போன்றவைகளும் பல்வேறு வகைகளில் கைபேசிகளில் விளையாடக்கூடிய விளையாட்டுகளும் முப்பரிமாண வடிவமைப்புகளில் பார்த்து விளையாடக்கூடிய மற்றும் கற்கக்கூடிய உபகரணங்கள் அனைத்தும் பயனர் இடைமுக வடிவமைப்பாளர்/பயனர் பரிமாற்ற வடிவமைப்பாளர் USER INTERFACE DESIGNER / USER EXCHANGE DESIGNER களால் உருவாக்கப்பட்டவைகளே.இவர்களின் வேறு வேலைகள் என்னென்ன ?. அதற்கான விளக்கத்திற்கு தொடருங்கள் கீழே!

**தொழில் துறை :** கணினி மற்றும் கணினி செயல்பாடு சார்ந்தது

## பணியின் விளக்கம்:

ஒவ்வொருவரின் தேவையைப் பூர்த்திச் செய்யக்கூடிய தனித்தனி இயந்திரங்களையோ, செயலிகளையோ, இணையதளத்தையோ வடிவமைப்பதற்கு பதிலாக ஒரே இயந்திரத்தில் அல்லது செயலியில் அனைவரின் தேவைகளைப் புரிந்துகொண்டு செய்யக்கூடியவைகளாக அவைகளை வடிவமைக்க வேண்டும். பயனர் இடைமுக வடிவமைப்பாளர்/பயனர் பரிமாற்ற வடிவமைப்பாளர் USER INTERFACE DESIGNER / USER EXCHANGE DESIGNER ஆகிய இரு பணிகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகும்.



பயனர் பரிமாற்ற வடிவமைப்பாளரானவர் பயனர் இடைமுக வடிவமைப்பாளர் வடிவமைத்தவைகளை நுகர்வோரின் தேவைகளையும் உள்ளுணர்வுகளையும்

புரிந்துகொண்டுஅதற்கேற்ப மாறுதல்களை மேற்கொண்டு செயலியை எளிமைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதோடுமட்டுமல்லாமல் கட்டமைப்புப்பணிகளின்போது உரிய விவரங்களை அளித்து திட்டப்பணிகளை முடிக்க வேண்டும். இப்பணிகளைச் செய்பவர்கள் மென்பொருள் பொறியாளராகவும் மேலாண்மை பணிகளைச்செய்பவராகவும் ஒவ்வொரு வேலையையும் காட்சிப்படுத்தி உள்ளுணர்வோடு தொடர்பு படுத்தி ஒவ்வொரு பிரிவினரும் புரிந்து பயன்படுத்தக்கூடிய வகையில் பணிகளை மேற்கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு வீட்டைக் காட்சிப்படுத்தும் வேலையை முப்பரிமாணத்தில் காண்பிக்க வேண்டியிருப்பின் சாலையில் ஆரம்பித்து வீட்டின் நுழைவுவாயிலில் அடியெடுத்து வைத்து வீடுமுழுவதும் உள்ளே சென்று நேரில் பார்த்த அனுபவத்தை உண்டுபண்ணி அவ்வீட்டை விற்பனை செய்வதற்கு உதவுவது போன்றதாகும்.




## பணிச் சூழ்நிலை:

- இப்பணியினை முழுநேரமாகவோ பகுதி நேரமாகவோ மேற்கொள்ளலாம்
- உள்ளூர் மற்றும் வெளியூர் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும்

## வேலை நேரம் :

குறைந்த பட்சம் 9 மணி நேரம் பணிசெய்ய வேண்டியிருக்கும். இப்பணி மாற்றுத்திறானாளிகளுக்கு உகந்தது .

## கல்வித்தகுதி மற்றும் பயிற்சி:—

மேல்நிலைக் கல்விக்குப் பின் B.Sc. in User Interfacel and Graphics Design கல்வித்தகுதியைப் பெறலாம் இளங்கலை, முதுகலை அறிவியல்

அல்லது பொறியியல் பட்டப்படிப்பில் இயந்திரவியல், உள்கட்டமைப்பு, நுண்கலை,மின்னியல், மின்னணுவியல், வடிவமைப்பு போன்ற பல்வேறு பொறியியல் பிரிவுகளில் பட்டம் பெற்றபின் , M.Des in Interactive Design கல்வித்தகுதியைப் பெறவேண்டும்.

| வ.எண் | வழங்கப்படும் கல்வி | வழங்கும் நிறுவனம் |
|---|---|---|
| 1 | B.Des and M.Des in Interactive Design | Indian Institute of Technology Mumbai( admission based on UCEED exam ) |
| 2 | M. Des In Computer Interaction Design | AJEENKYA D Y PATIL UNIVERSITY,PUNE<br>**Duration :** 2 years, Full-Time<br>**Eligibility :**Graduation in Design, Architecture, Engineering, Computer Science, Media Communication, Social Sciences, Psychology |
| 3 | M.Des in Interactive Design | National Institute of Design, Ahmedabad<br>Candidates seeking admission to the M Des. program in interaction design could be from varied backgrounds such as graduates in varied engineering disciplines, fine arts, architecture, 4-year diploma in design. |
| 4 | M.Des in Interactive Design | University of Petroleum and Energy Studies - Bidholi, Via Prem Nagar, Dehradun, Uttarakhand 248007 admitted through CEED or GATE<br>https://www.upes.ac.in/mdes-interaction-design |
| 5 | M.Des in Interactive design(5year course)Integrated programme<br><br>Post graduate Diploma in Interactive design | After HSC<br>D J Academy of Design (DJAD) Coimbatore affiliated to Anna University( After H.Sc)<br><br>Degree/Diploma in Engineering/Arts/Fine Arts/Design/Architecture with proficiency in Information Technology |

**Certification Courses:-**

| | | |
|---|---|---|
| 1 | Certified Usablility Analyst(10 days) | Human Factors International |
| 2 | HCI Monsoon Course (15 days) | IIT, Mumbai |

| | | |
|---|---|---|
| 3 | UX delivery process, Usability best practices, Interaction Design, Information Architecture, Interface design and Navigation Design | Design Incubator |
| 4 | Online courses | Coursera, Udemy, Lynda ,Rutgers, Nielson Norman Group |

## முக்கிய திறன் தேவைகள் :–

தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய திறன்.பல்வேறு கணினி திட்டமொழிகளைத் தெரிந்திருத்தல் நுகர்வோர் மற்றும் சந்தை நிலவரத் தேவை குறித்த தகவலறிவு, உளவியல் அறிவு, எந்த சூழ்நிலையிலும் மாற்றி யோசிக்கும் தன்மை, பன்முகமாக யோசித்துப் புதுமையாகக் கண்டுபிடித்து அதனை வடிவமைத்து செயலாக்குவதில் புலமை. பயனீட்டாளரின் விருப்பமறிந்து பொருளின் செயல்பாட்டை வடிவமைத்தல்.

## விரும்பக்கூடிய திறன் தேவைகள்:

தொடர்புத்திறன், குழுக்களோடு இணைந்து பொறுமையோடு பணியாற்றகூடிய மனப் பக்குவம், ஒவ்வொருவரின் நடத்தையையும் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயாலாற்றாக்கூடிய திறமை.

### தேவையான அனுபவம்:

### தொழில் வளர்ச்சிப் பாதை மற்றும் வேலையளிப்பவர்கள்

- User Interface Designer
- Interaction Design
- User Experience Design for Smart products & systems
- Web-based Products
- Interfaces for on-line transactions
- Interface for Control - Display Panels for Industrial Control Systems
- Front end designer and Backend Designer

- Team leaders/Project Managers

மேலும் IT services & products, consumer durables & devices, automotive, healthcare, media etc. போன்ற துறைகளிலும் வேலைவாய்ப்பைப் பெறலாம். அரசுத்துறையைப் பொறுத்தவரை இக்கல்வித்தகுதியை குறிப்பிட்ட பணிக்கென வரையரை செய்யவில்லை. வருங்காலத்தில் தானியங்கி சேவைகள் பெருக பெருக அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை அள்ளித்தரும் மற்றும் வளர்ந்து வரும் ஒரு வேலையாக பயனர் இடைமுக வடிவமைப்பாளர் வேலை இருக்கும்.

**ஊதியம்:–**

**1,00,000** முதல்**6,00,000** வரை ஊதியம் பெற வாய்ப்புள்ளது.

**தேவையான அனுபவம்:–**

கணினி மொழிகளில் பணியாற்றிய முன் அனுபவம் மிகுந்த பலனளிக்கும்

**தொழில் குறியீட்டு எண் ( தகுதி)**

| Standard | Code | Description |
|---|---|---|
| NCO 2015 | 2513.0201 | Create complex user interfaces for a variety of applications |
| ISCO 2008 | 2513 | |
| QPNOS Reference | SSC/Q0502 | |
| NSQF | 7 | |